
# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 7
இதழ் : 3
ஜனவரி – 2011



2011–ல்

## இதோ, நான் (தேவன்) புதிய காரியத்தைச் செய்கிறேன்

ஏசாயா 43:19)

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள். ***"WeWish You all a happy Blessed New Year-2011".***

தேவன் தாமே 2011 ம் புதிய ஆண்டில் நம்மை பிரவேசிக்க செய்தபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

இப்புதிய ஆண்டிலும் தேவன் ஏசாயா 43:19ன்படி "இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்" என்று வாக்கு கொடுக்கிறார்.

2011ம் புதிய வருடம் தேவன் தம் ஜனங்களை தம் வருகைக்கு ஆயத்தப்படுத்தும் ஒரு வருடமாக இருக்கும். தேவ ஜனங்கள் தங்களை பரிசுத்தத்திற்கு ஒப்புக் கொடுப்பார்கள். தேவனுக்காக வாழ்வதற்கு தங்களை அர்ப்பணிப்பார்கள். சபைகள் தோறும் மாபெரும் எழுப்புதல் உண்டாகும் நான்கு திசைகளிளிருந்தும் ஆத்துமாக்கள் தேடி வருவார்கள் . தேவன் தம் சபையை மகிமைப்படுத்துவார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மகிமைக்காக செய்யப்படும் அனைத்து ஊழியங்களும் கனப்படுத்தப்பட்டு உயர்த்தப்படும். பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியும், ஆவிக்குரிய வரங்களும் ஊற்றப்படும் உன்னதமான வருடம் வரும் புத்தாண்டாகும். குறிப்பாக ஆண்டவரை நேசிக்கிற ஜனங்களின் சந்ததியை தேவன் ஆசீர்வதிப்பார்.

ஆகிலும், பிசாசானவன் தனக்கு கொஞ்சகாலம் என்பதை அறிந்து தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையே குறியாக வைத்து வஞ்சிக்கிறஆவியினால் குடும்பங்களையும், சபைகளையும், ஊழியர்களையும் அழிக்கச் செயல்படுவான். ஆகையால் ஆவியில் விழித்திருந்து தங்களை காத்துக் கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். ஆனாலும் கர்த்தர் தம் ஜனங்களுக்காக யுத்தம் செய்வார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான ஆயத்த அடையாளங்கள் மிகத் துல்லியமாகக் காணப்படும். இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும் என பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறார்.

2015க்குள் 10 லட்சத்திற்கும் அதிகமான பீல் ஆத்துமாக்களை தேவன் தருவதற்ககு சித்தமுள்ளவராக இருக்கிறார். சகோ. மோகன் சி.லாசரஸ் அவர்கள் மூலமாக ஷாலோம் ஊழியர் குடும்ப முகாமில் ஆவியானவர் தம் சிறப்புத் திட்டங்களை தேவன் தந்துள்ளார். அதை நிறைவேற்ற எங்களுடன் சேர்ந்து சுவிசேஷப் பணியின் பங்காளராக செயல்படுங்கள்.

உங்கள் யாவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*



(Rt. Rev. Dr. V. Devadass)



# இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

வருஷத்தை நன்மையினால் முடிசூட்டுகிற கர்த்தர் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒவ்வொரு புதிய வருடத்தில் நாம் பிரவேசிக்கும்போது, தேவ பிரசன்னத்தில் நிரம்பினவர்களாய் தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டு குறிப்பாக வாக்குத்தத்தங்களை படித்து ஜெபிக்கிறோம். தேவன் தாமே அப்படியே நம்மை ஆசீர்வதிக்கிற கர்த்தராக இருக்கிறார்.

இவ்வருடமும் தேவ பாதத்தில், 2011ம் ஆண்டின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்த போது ஆவியானவர் தாமே ***"இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன். அது இப்போதே தோன்றும்"*** என்று வாக்குரைத்தார். ஏசாயா 43ம் அதிகாரத்தில் இந்த வாக்குத்தத்தத்தை வாசிக்கிறோம். சிறைப்பட்டு இருக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நம்பிக்கையையும், மீட்பையும் கொடுக்கும் பொருட்டாக தேவன் தந்த ஆறுதலான, நம்பிக்கையான வாக்குத்தத்தங்கள். இவ்வருடத்தில் தாமே நமக்கும் தேவன் புதிய காரியத்தை செய்ய விரும்புகிறார். அதை இப்போதே, அதாவது முதல் நாளி–ருந்தே, அதைத் தோன்றச் செய்கிறார் அல்லேலுயா! இவ்வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை ஏசாயா 43ம் அதிகாரத்தை முழுவதுமாகத் தியானித்தால் நாம் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

முதலாவதாக வாக்குத்தத்தம் செய்பவர் யார்? அவர் தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர். அவரால் எல்லாம் கூடும். அவரே செல்கிறார் நான் புதிய காரியத்தை செய்கிறேன். ஏசாயா 43ம் அதிகாரத்தில் நான், என், என்னுடைய என்கிற வார்த்தைகள் சுமார் 50 முறை வருகிறது.

நான் என்று கர்த்தர் தம்மை எப்படியாக வெளிப்படுத்துகிறார்? சிருஷ்டித்தவர், உருவாக்கியவர், இஸ்ரவே–ன் பரிசுத்தர், தேவனாகிய கர்த்தர், நானே கர்த்தர், நானே தேவன், உங்கள் மீட்பர், பரிசுத்தராகிய கர்த்தர், இஸ்ரவே–ன் சிருஷ்டிகர், உங்கள் ராஜா, **ஏசாயா 43:16,17 சமுத்திரத்திலே வழியையும் வ–ய தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்கி,**

**இரதங்களையும் குதிரைகளையும் இராணுவங்களையும் பராக்கிரமசா—களையும் புறப்படப்பண்ணி, அவைகள் எழுந்திராதபடிக்கு ஒருமித்து விழுந்து கிடக்கவும், ஒரு திரி அணைகிறதுபோல் அவைகள் அணைந்து போகவும்பண்ணுகிற கர்த்தர்.**

எனவே முதலாவது, வாக்குத்தத்தம் பண்ணுகிற நாம் கர்த்தரை அறிந்து விசுவாசிக்க வேண்டும். **ஏசாயா43:10 வாசிப்போம். நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னைஅறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் செல்லுகிறார்; எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை.**

நாம் அவரை உணர்ந்து, அறிந்து, விசுவாசிக்கும்போது நாம் அற்புதங்களை பெற்றுக் கொள்கிறோம்.

மேலும், அவருக்குச் சாட்சிகளாக விளங்குகிறோம். 40 வருடங்கள் வனாந்திர பாதையில் இஸ்ரவேல் ஜனங்களை அவருடைய பலத்த கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் நடத்தியவர் அவர். அத்தனை இலட்ச ஜனங்களுக்கும் தான் மோசே மூலமாக உண்ண மன்னாவாகிய உணவையும், குடிக்க தண்ணீரையும், ஜனங்கள் கேட்ட இறைச்சியையும் கொடுத்து போஷித்தவர் அவர். அனைத்து சத்துருக்களின் பிடியி—ருந்தும் விடுவித்து, கானான் சேரும் வரை வெற்றி சிறக்க வைத்த யேகோவா நிசி அவர். தேவ ஜனங்களுக்கு நீதி, நியாயத்தையும், தன் கற்பனைகளை நியாயங்களாகக் கொடுத்து பரிசுத்த ஜாதியாக நடத்தி சென்றார் நம் கர்த்தராகிய தேவன் அவர். அவரே இந்த புதிய வருடத்தில் நம்மை கரம் பிடித்து நடத்திச் செல்கிறார். நாம் அவர் கரத்தை பிடிப்பதை விட அவர் கரம் நம்மை பிடித்து செல்லும்படியாக அர்ப்பணிப்போம். **ஏசாயா 43:15** "**நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும், இஸ்ரவே—ன் சிருஷ்டிகரும், உங்கள் ராஜாவுமானவர்.**"

இரண்டாவதாக, புதிய காரியத்தை தேவன் செய்ய விரும்புகிறார். நாம் விசுவாசத்துடன் அதை அறிக்கை செய்வோம். புதிய ஆண்டில் தேவன் எனக்கு புதிய காரியத்தைக் கட்டாயம் செய்வார். தேவன் அதை செய்வதற்கு முன்பாக **ஏசாயா 43:18ம் வசனத்தை வாசியுங்கள்.** "**முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.**" என்று தேவன் நமக்கு ஆலோசனை தருகிறார். வேதம் சொல்லுகிறது ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் யாவும் ஒழிந்துபோயின, எல்லாம்

புதிதாயின (2கொரி.5:17) என்று. நம்மை கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்த பின்பு, தேவன் நம்மை புதிய பாதையில் நடத்துவார். பழையவைகளை ஒழித்துப் போடுகிறார். 2010ம் ஆண்டில் நம் தோல்விகள், இயலாமைகள், பயங்கள் அனைவற்றையும் அறிக்கை செய்து, நம்மை ஆராய்ந்து பரிசுத்தத்திற்கு நேராக நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, புதிய காரியத்தை அவர் நமக்குக் கட்டாயம் செய்வார். மட்டுமல்ல, தேவன் பழையவைகளை நினைக்கிறவரல்ல. சங்கீதம் 103:12, **"மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்"** என்று பகர்கிறது. ஆகவே, நாமும் பழையவைகளை எண்ணாதபடி, தேவன் அனைத்தையும் நீக்கி பரிசுத்தமாக்கி விட்டார் என்பதை நாம் நினைவில் கொள்வோம். 2011ல் புதுசிருஷ்டியாக இயேசுவுக்குள் வாழ்ந்து பிரகாசிப்போம்.

அடுத்தபடியாக புதுசிருஷ்டியாக மட்டுமல்ல, எசேக்கியேல் 11:19ல் தேவன் தந்த வாக்குதத்தம் ; **"அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக்கொடுத்து கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்தி–ருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்."**

இந்த வசனத்தில் தேவன் இரு பெரும் காரியங்களைச் செய்கிறார். கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்தி–ருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயம், அதாவது, நம் இருதயத்தையே அவர் மாற்றி புதிய இதயம் தருகிறார். அதன் மூலம் புதிய சிந்தை, புதிய தீர்மானம், புதிய சுபாவம், கிறிஸ்துவின் சிந்தை, கிறிஸ்துவின் சுபாவங்கள் நமக்குள் உண்டாகிறது. நம்மைக் காண்பவர்கள் கிறிஸ்துவைக் காண்பார்கள், அறிவார்கள். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

மட்டுமல்லாமல், புதிய ஆவியைக் கொடுக்கிறார் என எழுதப்பட்டுள்ளது. புதிய சிருஷ்டியாக மாற்றிய கர்த்தர் அதோடு நம்மை விட்டுவிடவில்லை. புதிய எண்ணெயால், புது அபிஷேகத்தால், புதிய ஆவியினால் நம்மை நிரப்ப விரும்புகிறார். நம் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் 20 ஆண்டுகள் ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார். படிப்பறிவில்லா, குடித்து, வெறித்து, கொள்ளையிட்டு, மந்திர பூஜைகள் செய்து வாழும் இந்த பீல் மக்கள் இன்று தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். எத்தனைஆச்சரியம்! பல வருடங்களாக, பீடி, சிகரட்டு, தம்பாக்கு, சாராயம் குடித்து வெறித்து வாழ்ந்தார்கள். இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒரே நாளில் அத்தனையும் விட்டுவிட தேவன் கிருபை தந்தார். மட்டுமல்ல பீ–, பிலோடி, வாகுடி பாஷைகளில் வேதப்புத்தங்கள் கிடையாது. எழுத்தில்லாத பாஷைகள் பேசுகிறார்கள். ஆனால் இயேசுவின்

அன்பைப் பெற்று இயேசுவை மனதார நேசிக்கிறார்கள். கர்த்தர் தாமே இவர்களுக்கு தம்முடைய புதிய ஆவியை, பரிசுத்த ஆவியை தந்து நிரப்பியுள்ளார். இன்று பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலுக்கு காரணம் இவர்கள் மேல் ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேக வல்லமையாகும். பரிசுத்த ஆவியில் ஒருமுறை நிரப்பப்பட்ட, தொடப்பட்ட அனுபவம் அல்ல. அனுதினமும் புது எண்ணெயில், புதுக்கிருபையில், புது அபிஷேகத்தால் நிரப்பப்படுவோம். தேவனோடு உறவாடும் அனுபவத்தில் கடந்து செல்வோம்.

அடுத்ததாக, புதிய காரியத்தை என்று தேவன் உரைக்கும்போது, **"வனாந்தரத்திலே வழியையும், அவாந்திரவெளியில் ஆறுகளை உண்டாக்குவேன்"** என்று கூறுகிறார். ஒருவேளை நம் வாழ்க்கைப் பாதையில் ஊழியப் பாதை வனாந்திரமாகவும், அவாந்திர வெளியாகவும் காணப்படலாம். நோய்கள், வறுமை, பிரச்சினைகள், தொடர்ந்து வரும் சாபங்கள், பிசாசின் போராட்டங்கள், கனியற்ற நிலைமை, தனிமையாகக் கைவிடப்பட்ட சூழ்நிலை இவைகள் யாவும் வனாந்திரமாக, அவாந்திர வெளியாக காட்சியளிக்கலாம். ஆனால் இவ்வருடத்தில் தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். வனாந்தர பாதையில் உனக்கு வழிகள் உண்டாகும். அவாந்திர வெளியாக காணப்படும் உன் வாழ்க்கையில், குடும்பத்தில், ஊழியப்பாதையில் ஆறுகள் உண்டாகும். மாராவின் கசப்புகள் மதுரமாகும். தேவன் இப்புதிய வருடத்தில் நம்மை சந்தோஷப்படுத்த விரும்புகிறார். விசுவாசத்துடன் அடியெடுத்து வைப்போம். ஏனெனில் ஏசாயா 43:4–ல் வாசிக்கையில், "நீ என் பார்வைக்கு அருமையானவன், நானும் உன்னை சிநேகித்தேன்." என்று உரைக்கிறார். நமக்காக தம் ஒரே குமாரன் இயேசுயே அனுப்பி இவ்வளவாய் அன்பு கூர்ந்த தேவன் நம் மத்தியில் கடந்து வந்திருக்கிறார்.

கர்த்தராகிய ஆவியானவர் சொல்கிறார் : **"இப்போழுதே அது தோன்றும்."** இவ்வருடத்தின் முதல் நாளிலே அது தோன்றும். உங்கள் வாழ்க்கையில், குடும்பத்தில், ஊழியப்பாதையில், உங்கள் கையிட்டுச் செய்யும் வேலைகளில். வியாபாரம் மற்றும் தொழில் காரியங்களில் இப்போழுதே அது தோன்றும். நீங்கள் அதை காண்பீர்கள். **"உன்னைப் பேர் சொல்– அழைத்தேன்; நீ என்னுடையவன்"** ஏசாயா 43:1 என்று தேவன் நம்மை அழைத்து "இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன். இப்போது அது தோன்றும்" என வாக்குக் கொடுக்கிறார்.

தேவன் தாமே இப்புதிய ஆண்டு முழுவதும் நம்மை நடத்திச் செல்லுவாராக! ஆமென்.

## ஷாலோம் ஜெபக் கூடுகைகள்

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்றுவருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதிஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *ஜனவரி மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 07.01.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 8. செல் : 99940–25696 |
| 08.01.2011 | சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 15.01.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 26.01.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது, தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

***"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக".*** **சங்கீதம் 138:8**

# நன்றி கூறுகிறோம்...

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் ஷாலோம் பணித்தளங்களில் இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கும் கொண்டாட்டமாக 520 சபைகளில் சுமார் 1000க்கும் அதிகமான கிராமங்களில் உள்ள விசுவாசிகள் தேவ நாமம் மகிமைப்பட ஆசரித்தார்கள். முதலாவதாக டிசம்பர் 6,8,10, 13 ஆகிய தேதிகளில் ஊழியர்களுக்கான சிறப்புக் கூடுகையில், **Bishop.V.** தேவதாஸ் அவர்கள் சிறப்பு செய்தி வழங்கி, **"கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவிப்பதே நம் பிரதான வாஞ்சையாக இருக்க வேண்டும்"** என்ற செய்தியை ஊழியர்கள் அனைவரும் ஏற்று, தங்கள் சபையில் அதை அறிவிக்கும் பணிக்காக அர்ப்பணம் செய்தார்கள்.

இவ்வருடம் 465 சுதேச ஊழியர்கள் குடும்பத்தினருக்கு அழகான Safari Dress Material, ஊழியக்காரிகளுக்கு நல்ல சிறப்பான சேலை குறிப்பாக அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் ஷாலோம் விடுதியின் பிள்ளைகள் அனைவருக்கும் சுமார் 2100 பேர்களுக்கு ஆவியானவரின் வழி நடத்துத–ன்படி ரெடிமேட் ஆடைகளும் ஜெபத்துடன் வழங்கப்பட்டது. மேற்கண்ட உடைகளுக்கு மட்டும் ரூ.7 இலட்சங்கள் செலவிடப்பட்டது.

மேலும் Compassion மூலம் தாங்கப்படும் சுமார் 600க்கு அதிகமான பிள்ளைகளுக்கு அழகான உடைகள் X' mas Gift ஆக வழங்கப்பட்டன. ஹிரோலா, ஜெரி, அந்தர்வே–யா 9, 11, 19 ஆகிய தேதிகளில் சிறப்பு சிறுவர்களுக்கான X' mas நிகழ்ச்சிகள் மிக நேர்த்தியாக நடைபெற்றன. மேலும் டிசம்பர் 17ம் தேதி இனைத்து இராஜஸ்தான் சிறுவர்களுக்கான சிறப்பு X' mas நிகழ்ச்சியும் , டிசம்பர் 18ம் தேதி குஜராத், மத்திய பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சுமார் 15 நாட்களாக 3 மாநிலங்களில் உள்ள ஷாலோம் சபையார் கிறிஸ்மஸ் பாடல்களை இயேசு பிறந்தார் என்ற நற்செய்தியை விசுவாசிகளுக்கு மட்டுமல்ல அக்கம்பக்கத்தில் உள்ள குடும்பங்களுக்கும் அறிவித்து நடனமாடி தேவனைத் துதித்தார்கள். பல கிராம சபைகளி–ருந்து தாகோத் ஷாலோம் அலுவலகம் மற்றும் எங்கள் வீடுகளில் வந்து சந்தித்து பாடி நடனமாடி துதித்து மகிழ்ந்த காரியம் மறக்க முடியாததாகும்.

தேவ கிருபையில் இராஜஸ்தானில் உள்ள சபைகள் 20ம் தேதி முதல் 24ம் தேதி வரை கதேடியா, கோப்கா, தாட்கா, பேடவ், காளியா ஆகிய கிராம சபைகளை மையமாக வைத்து கிறிஸ்மஸ் மேளாவை கொண்டாட ஜெபத்துடன் ஒழுங்கு செய்தார்கள். ஆயிரம் ஆயிரமான

விசுவாசிகளும் பல நூறு கிராம ஜனங்களுடன் இசைந்து கிறிஸ்துவின் பிறப்பின் மகிழ்ச்சியை கொண்டாடினார்கள்.

குறிப்பாக, 25ம் தேதி ஷாலோம் திருச்சபைகள் முழுவதும் கிறிஸ்துவின் பிறப்பின் சந்தோஷ ஆராதனைகளை நடத்துவதற்கு தேவன் கிருபை தந்தார். பெரும்பாலான விசுவாசிகள் குறைந்தது ஒரு குடும்பத்தினருக்கு நற்செய்தியை அறிவித்து ஆலயத்திற்கு அழைத்து வந்திருந்தார்கள். எவ்வித குறைகள், பிரச்சினைகள் இன்றி தேவ நாம மகிமைக்காக அனைத்து வைபவங்களும் நடைபெற தேவன் கிருபை தந்தார்.

அனைத்து சுதேச ஊழியர்கள் மற்றும் சபையாரின் ஜெபங்கள் விசேஷமாக டிசம்பர் 1ம் தேதி மற்றும் 15ம் தேதி சகோதரி. வஹிதா தேவதாஸ் தலைமையில் ஏறெடுக்கப்பட்டு உபவாச ஜெபங்கள், முழுஇரவு ஜெபங்களை தேவன் அங்கீகரித்து ஆசீர்வாதங்களைக் கட்டளையிட்டார். அனைத்து சபைகளுக்கான Star, Decoration பொருட்கள் ம–வான விலையில் கொடுக்கப்பட்டது. நம் தாகோத் அலுவலக ஊழியர்கள் இரவு, பகலாக உழைத்தார்கள். குறிப்பாக சிறுவர்கள் X' mas நிகழ்ச்சிகள் அனைத்தையும் சகோதரி. வஹிதா தேவதாஸ் தலைமையில் Training Unit சகோதர, சகோதரிகள் சிறப்பாக நடத்த உதவி செய்தார்கள்.

2010ம் ஆண்டு கிறிஸ்மஸ் நாட்கள் ஆசீர்வாதமாக அமைய காரணமாயிருந்த, ஜெபித்த சுதேச ஊழியர்கள் மற்றும் ஆதிவாசி பிள்ளைகளும், காணிக்கைகளால் தாங்கிய உங்கள் யாவருக்கும் விசேஷமாக தலைமை அலுவலக ஊழியர்கள், முன்னேற்ற ஊழியர்கள், பிரதிநிதிகள், யாவருக்கும் நன்றி கூறுகிறோம். மிக அன்புடன் எங்களுக்கு வாழ்த்து அனுப்பிவித்த Card, SMS, email மேலும் Gift மூலமாக உங்கள் யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாகவும், ஷாலோம் ஊழியர்கள் சார்பாகவும் நன்றி தெரிவிக்கிறோம்.

தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

---

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்



***பிரியமானவர்களே,***

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

# புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்க ஆயத்தமா?

புதிய ஆண்டிற்குள், பிரவேசிக்கும் போதெல்லாம் இந்த ஆண்டு எப்படியாவது ஆசீர்வாதமாயிருக்க வேண்டுமே என்ற ஆதங்கமே நம்மில் அநேகரிடம் காணப்படுகிறது. எனவே அந்த அடிப்படையில் ஜெபிக்கவும், வாக்குத்தத்தங்களைத் தேடவும் செய்கின்றோம். புத்தாண்டில் நமக்கு கொடுக்கப்படுகின்ற போதனைகள் கடந்த ஆண்டைப் போலல்லாமல், இந்த ஆண்டில் தேவனால் மிகுந்த ஆசீர்வாதங்கள் வரும் என்ற நம்பிக்கையைத் தருவதிலேயே குறியாயிருக்கின்றன. எனவே தான் புத்தாண்டில் கொடுக்கப்படுகின்ற பெரும்பாலான வாக்குத்தத்தங்கள் தேர்தல்கால வாக்குறுதிகள் போல விளைவுகளை ஏற்படுத்தாமல் போகின்றன.

நாம் தேவனால் படைக்கப்பட்டவர்கள் என்று நம்பினால் அந்த தேவன்தான் இந்த புதிய ஆண்டையும் காணச்செய்கின்றார் என்றும் நம்பவேண்டும். நாம் புதிய ஆண்டிற்குள் பிரவேசித்தற்கு தேவனுடைய சித்தம் தான் காரணம் என்று நம்பினால் அந்த தேவன்தாமே இந்த ஆண்டு முழுவதும் நம் வாழ்க்கைக்கு பொறுப்பாளர் என்றும் நம்பலாம்.

ஆனால் நாம் பிரச்சினைகளி–ருந்து விடுதலை பெறுதல், நன்றாக ஆசீர்வதிக்கப்படுதல் ஆகியவைகளையே புத்தாண்டின் எதிர்பார்ப்புகளாகக் கொண்டிருக்கும்போது நம்முடைய பக்கத்தி–ருந்துதான் இந்த ஆண்டைப் பார்க்கின்றோம் என்று அர்த்தம். ஆனால் நாம் தேவனுடைய பக்கத்தி–ருந்துதான் எதையும் பார்க்க வேண்டும். அவருடைய பக்கத்தி–ருந்து இந்த ஆண்டைப் பார்க்க விரும்பினால், இந்த ஆண்டில் நம் வாழ்வின்மேல் உள்ள தேவநோக்கமும், திட்டமுமே நம்முடைய முக்கிய விஷயங்களாயிருக்கு வேண்டும்.

தேவனே புதிய ஆண்டிற்குள் என்னைப் பிரவேசிக்கச் செய்திருக்கின்றீர். இப்போழுதும் நான் என்ன செய்ய சித்தமாயிருக்கின்றீரோ, அதற்காக என்னை நான் ஒப்புவிக்கிறேன். என்னையும் என்னுடைய வாழ்க்கையையும் நீர் பொறுப்பெடுத்துக் கொண்டு நடத்தும் என்ற விதமாக நம்முடைய புத்தாண்டு விண்ணப்பம் அமைய வேண்டும் தேவனுடைய நோக்கங்கள் சார்ந்த வாழ்க்கைக்கு நேராக நம்முடைய கண்களைத் திருப்பவேண்டும்.

தேவன் நம்மை ஒரு நோக்கத்தோடு இந்த 2011 ம் ஆண்டிற்குள் பிரவேசிக்கச் செய்கின்றார் என்ற நம்பிக்கையின் பின்னால் அவரே இந்த ஆண்டில் நம்முடைய சகல சூழ்நிலைகளுக்கும் போதுமானவராயிருப்பார் என்ற நம்பிக்கையும் உள்ளது. என்னை ஆசீர்வதிக்கவே தேவன் இருக்கிறார் என்ற நம்பிக்கையை முதலாவது இடத்தில் வைக்காமல், தேவனுடைய நோக்கங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றவே தேவன் என்னை வைத்திருக்கின்றார் என்ற நம்பிக்கையை முத–டத்தில் வைப்போம். அவருக்காக நான் எப்படி வாழவேண்டும், எப்படி வாழ்ந்தால் என் வாழ்வினால் அவர் மகிமைப்படுவார், என்று நாம் சிந்தித்துச் செயல்பட ஆரம்பிப்போம். அப்போது தேவன் இந்த வருடத்தின் முதல் நாளி–ருந்து வரப்போகிற ஒவ்வொரு நாளும் நமக்காக நம்மோடிருப்பதை நிச்சயமாகக் காண்போம்.

**நன்றி – ஜீவநீரோடை**

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் ''V. DEVADASS'' (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

# 2010ம் ஆண்டில் என் வாழ்வில் தற்பரிசோதனை வினாக்கள்.

? பரிசுத்தமே எனது பிரதான நோக்கம் என்பதை அடிக்கடி மறந்து என்னை பரிசுத்தக் குலைச்சல் ஆக்கினேனா?

? தேவனிடம் சரியா பேசுகிறேனா? வீண் வார்த்தைகளை அலப்பி அர்த்தமின்றி உதட்டளவில் ஜெபிக்கிறேனா?

? ஆவியோடும், கருத்தோடும், தனிமையில் அதிகம் தேவனோடு பேசுபவரை அசட்டை பண்ணியிருக்கிறேனா?

? என்னில் பரிசுத்தம் இல்லையே, நான் ஏன் ஜெபிக்க வேண்டும் என்ற பிசாசின் ஆலோசனைக்கு செவி சாய்த்து ஜெபிக்காமல் இருந்திருக்கிறேனா?

? தேவை உள்ளவர்களைக் கண்டும் காணதவன் போல் இருந்திருக்கிறேனா?

? பொய் எனக்கு விளையாட்டு போலாகி விட்டதா?

? புறங்கூறுதலை நியாயப்படுத்தி பேசுகிறேனா?

? ஆசீர்வதிக்க வேண்டியதே அன்றி, சபியாதிருங்கள் என்று அறிந்திருந்தும் சாபமிட ஆத்திரமடைகிறேனா?

? மற்றவர்களை மனம் நிறை ஆசீர்வதித்து, அவர்கள் முன்னேற்றத்திற்காக ஜெபிக்கிறேனா?

? வாயின் வார்த்தைகளை அடக்காமல் மற்றவர்களை காயப்படுத்தி இருக்கிறேனா?

? இதயத்தில் அக்கிரமச் சிந்தை உருவாகும்போது உடனடியாக அதை மாற்ற முயற்சிக்கிறேனா?

? உடன் பிறந்தவர்களையும், விசுவாச சகோதரர்களையும் என்னைப்போல் நேசிக்கிறேனா?

? பொறாமை எலும்புருக்கி என்று அறிந்திருந்தும் பிறர் முன்னேற்றம் கண்டு எரிச்சலடைகிறேனா?

? இச்சைக்கு விலகி ஓடாமல் நின்று, உட்கார்ந்து, இச்சையிலேயே நடக்கிறேனா?

? என் ஜீவன் எல்லையெங்கிலும் பரிசுத்தம் காணப்படவேண்டும் என்று அடிக்கடி மனது சொல்வதை தட்டிக் கழிக்கிறேனா?

? கசப்பும், வைராக்கியமும் மனதை நிறைத்ததால் மன்னிப்பை நிராகரித்திருக்கிறேனா?

? வேதம் என் மனமகிழ்ச்சியாயிருக்கிறதா, அல்லது ஏதோ கடமைக்காக வாசிக்கிறேனா?

? ஜெபநேரம், ஆலய ஆராதனை, இவைகளில் அசட்டையாக வாசிக்கிறேனா?

? எனது குடும்பம், தொழில் இவற்றில் முதல் ஆலோசகர் தேவன்தானா?

? தேவனை விடவும் மனிதரை, பணத்தை, அந்தஸ்தை, புகழை விரும்புகிறேனா?

? உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும், கூறாமல் வாதாடி என்னை நியாயப்படுத்துகிறேனா?

? தவறு என்று அறிந்தும், மன்னிப்பு வெளிப்படையாக கேட்காமல் தேவனுக்கும், மனிதருக்கும் முன்பாக ஒப்புரவாகாம–ருக்கிறேனா?

? எனது ஒரே ஒரு வாழ்க்கையை தேவனுக்கு என்று அர்ப்பணித்து சுவிசேஷத்தை பிரசங்கிக்க விருப்பமின்றி இருக்கிறேனா?

? என் அதிகாரி, குடும்பர்– இவர்கள் முன்னிலையில் தேவனை அறிவிக்க சந்தர்ப்பம் அமையும்போது அமைதலாக இருந்து, தேவனை மறுத–த்து இருக்கிறேனா?

? உண்மை என் வாழ்வில் உண்டா? அநீதிக்காக உண்மையை பொய்யாக்கியிருக்கிறேனா?

? அளவுக்கு அதிகமாக சாப்பிடுகிறேனா?

? அந்தந்த காலத்துக்கு உரிய தேவைகளை தேவன் தருவார் என்கிற நம்பிக்கை இன்றி, நானாக சில தேவைகளை தேடிக்கொள்கிறேனா?

? தேவனுக்குரியதையும், மனப்பூர்வமான காணிக்கைகளையும் கொடுக்காமல் தேவனை பணத்தால் வஞ்சித்திருக்கிறேனா?

? பொருளாசையினால், தேவையற்ற பொருட்களை அடைய விரும்புகிறேனா?

? தொழில் மந்தமாகும்போது உதவி வரும் அந்த கன்மலையை நோக்கி பார்க்க தவறியிருக்கிறேனா?

? தொழில்தான் பிரதானம் என்று கூறி குடும்ப காரியங்களை கவனிக்க தவறியிருக்கிறேனா?

? நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் என்பதை அனுபவித்திருக்கிறேனா?

# ஷாலோம் பணித்தள வருகை அனுபவம்....

நாங்கள் Village Ministries Fellowship Chennai ஊழியர் குடும்பம் இரண்டுபேரும் எங்களுடன் இரண்டு விசுவாசிகளும் மொத்தம் ஆறுபேருமாக (Pr. Prasad - Mrs. Ruth Prasad, Pr. Dhanaraj - Mrs. Queen Ruth Dhanaraj, Mr. Sam Srinivasan & Mr. Sam Thanigai Arasu) பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களைக் காண வந்தோம்.

02.12.2010 அன்று நாங்கள் பரோடா என்ற ஊரில் மாலை 5.30 மணிக்கு வந்திரங்கிறோம். அதன்பின் மூன்று மணி நேரங்கள் பயணம் செய்து, தாகோத் வந்து சேர்ந்தோம். குஜராத் என்றவுடன் எங்கள் மனதில் ஒருவித பயம் இருந்தது. மொழி தெரியாத இடம், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக அநேக கலவரங்கள் நடைபெற்ற இடம். மேலும் எனது மனைவி (ரூத் பிரசாத்) குஜராத் என்றால் பூகம்பம் மற்றும் மலேரியா நோய் பற்றிதான் நினைவிற்கு வந்தது என்றார்கள். பிரயாணக்களைப்பில், புதிய இடத்தில் 02.12.1010–ல் இரவு எப்படி சென்றது என்பதே தெரியாது.

மறுநாள் நாங்கள் இராஜஸ்தானிலுள்ள ஷாலோம் சபையில் பங்கு கொண்டோம். Pr. தனராஜ் குடும்பம் மற்றும் சகோ. சாம் தணிகையரசு இராஜஸ்தானிலுள்ள கும்புரா என்ற ஷாலோம் முதல் சபையில் செய்தி கொடுத்தார்கள். நாங்கள் (Pr. பிரசாத் குடும்பம்) மற்றும் சகோ. சாம் சீனிவாசன் பேடவ் நாத் என்ற சபையில் செய்தி கொடுத்தோம். இரண்டு சபைகளிலும் ஜனங்கள் நிரம்பி வழிந்தது எங்களை மிகவும் கவர்ந்தது. பீல் ஜனங்கள் தேவனை ஆராதித்ததைக் கண்ட சகோ. தணிகையரசு இனிமேல் நான் தேவனை பீல் மக்களைப் போலவே முழு மனதுடன் ஆராதிக்க தீர்மானம் எடுத்துள்ளேன் என்று கூறினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. காரணம் எல்லா ஜனங்களும் பாடலுடன் ஆடி தங்களை மறந்து தேவனை ஆராதித்தார்கள். இவர்களின் ஆராதனையை மறந்து சகோ. சீனிவாசன் இவ்வாறாகக் கூறினார் : “இவர்கள்தான் (பீல் ஜனங்கள்) உண்மையான உயிருள்ள தேவனை ஆராதிக்கிறோம் என்ற மனதுடன் ஆராதிக்கிறார்கள்.”

இராஜஸ்தானில் ஊழியம் செய்து மிகுந்த மன திருப்தியுடன் வந்தோம். வரும்வழியில் ஜாலோத் என்ற பகுதியிலுள்ள ஷாரோன் மருத்துவமனையைப் பார்க்க ஆண்டவர் உதவிச் செய்தார். இந்த மருத்துவமனையில் பணிபுரியும் Dr. Shiju அவர்களின் அர்ப்பணிப்பு எங்களை மிகவும் கவர்ந்தது.

04.10.2010 அன்று குஜராத்திலுள்ள சபைகளைப் பார்வையிடச் சென்றோம். வான்கோல்

என்ற ஊரிலுள்ள சபையைப் பார்த்தோம். அநேக உபத்திரவங்களின் மத்தியில் இந்த சபை உருவானது என்று கூறினார்கள். அனால் நாங்கள் பார்த்தபோது எந்த உபத்திரவத்தையும் நான் தாங்கத் தயார் என்று கூறுவதுபோல் சபை கெம்பீரமாக காட்சியளித்தது. இந்த சபையில் 75 குடும்பங்கள் உள்ளன. ஆனால் கிராமத்தில் இன்னும் 500 பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள்தான் என் தரிசனம் என்று சபை போதகர் சாம்சன் டாமோர் கூறினார். அவருடைய வார்த்தை தமிழ்நாட்டுக் கிராமங்க்ளில் ஊழியம் செய்யும் எங்களுக்கு ஒரு பெரிய சவாலாக இருந்தது.

அதன்பின் நாங்கள் பாரேவா என்ற கிராம சபைக்குச் சென்றோம். புதிதாக கட்டப்பட்ட இந்த சபை சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்கள் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும் என்பதை அறிந்து நாங்கள் மிகவும் சந்தோஷப்பட்டோம். அந்த சபையில் நல்ல ஒரு ஆராதனையை நடத்த தேவன் கிருபை செய்தார். தமிழ்நாட்டில் ஒரு மணி நேரம் ஜனங்களை உட்கார வைப்பது மிகவும் கடினம். ஆனால் இங்கு நான்கு மணி நேரத்திற்கு மேல் ஆலயத்தி–ருந்து தேவனை ஆராதித்தனர். நானும் Pr. தனராஜ் அவர்களும் பார்த்தது என்னவென்றால் ஜனங்கள் போதகரின் வார்த்தைக்கு முழுவதுமாக கீழ்ப்படிந்து நடந்தார்கள். விசுவாசிகளுக்கு போதகர் மேல் இருந்த அன்பும் மரியாதையும் மிகவும் நன்றாக தெரிந்தது. மறுநாள் ஞாயிறு (05.12.2010) நான் குடும்பமாகவும், சகோ சீனிவாசனும் மத்தியப்பிரதேசத்திலுள்ள பாட்லா என்ற சபை ஆராதனையில் பங்கு கொண்டோம். Pr. தனராஜ் குடும்பம் மற்றும் சகோ. சாம் தணிகையரசு ஆகியோர் குஜராத்திலுள்ள கங்கேலா என்ற கிராம சபையில் பங்கு கொண்டார்கள். இரண்டு இடங்களிலும் சபைகள் நிரம்பி வழிந்தன. எங்கள் சபையிலும் இதேபோல் தேவனை ஆராதிக்கும்படி ஜனங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று Pr. தனராஜ் அவர்கள் தீர்மானித்துள்ளதாக கூறினார்.

திருமதி குயின் ரூத் தனராஜ் அவர்கள் கூறியது : “பீல் மக்களின் தேவ அன்பு, தேவ பயம் கீழ்ப்படிதல், தேவ மனிதர்களை நேசிக்கும் பக்குவம், உபசரிப்பு, ஊழியம் ஆராதனை முறை இவற்றைப் பார்த்து, பொறுமையையும், தாழ்மையையும் கற்றுக் கொண்டேன். இம் மக்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கின்றேன். இனிமேலும் தொடர்ந்து ஜெபிப்பேன்.”

Pr. தனராஜ் அவர்கள் இவ்வாறாக தனது அனுபவத்தைக் கூறுகிறார்கள் : “தேவனை ஆராதிப்பதில் பீல் மக்கள் தேறினவர்களாக இருக்கிறார்கள். சூழ்நிலைகளை மறந்து, தன்னையே மறந்து தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

மறுநாள் 06.12.2010 குஜராத்திலுள்ள ஹிரோலா கிராமத்திலுள்ள சபையைக் காண கர்த்தர் உதவி செய்தார். இங்கு Compassion Project வழியாக 200 ஆதிவாசி பிள்ளைகளை ஆதரித்து வருகிறார்கள். இங்கு எங்களை நெகிழ வைத்தக் காரியம் என்னவென்றால், இங்குள்ள கர்ப்பிணி பெண்களுக்கு தினமும் நல்ல ஆகாரம் கொடுத்து குழந்தை பிறந்த பிறகு அவர்களுக்கு, முழுவதுமாக படிப்பு, உணவு, உடை போன்ற காரியங்களை இவர்களே பொறுப்பெடுத்து செய்கிறார்கள். இந்த நல்ல சேவையைப் பார்த்து நாங்கள் தேவனைத் துதித்தோம்.

அதன்பின் குஜராத் ஊழியர் கூட்டத்தில் பங்கு கொண்டோம். அனைவரும் அறுப்பின் பண்டிகை காணிக்கையினை அலுவலகத்தில் சமர்ப்பித்தார்கள். ஊழியர்களின் உண்மை மிகவும் தெளிவாகத் தெரிந்தது. அதன்பின் ஊழியர் அனைவருக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. பிஷப் தேவதாஸ் மற்றும் திருமதி வஹிதா தேவதாஸ் ஆகியோர் ஊழியர்களைக் கவனிக்கும் விதம், மற்றும் கரிசனை எங்கனை மிகவும் உற்சாகப்படுத்தியது. 07.10.2010 அன்று காலை எங்கள் பயணத்தை மன திருப்தியுடன் முடித்துத் திரும்பினோம்.

*Pr.* ***பிரசாத்,*** *Village Fellowship Ministries - Chennai.*

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள்
**08.01.2011, சனிக்கிழமை**

நேரம்
**மாலை 5.00 மணி**
**முதல் 7.00 மணி வரை**

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,***
***தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

Chennai Village Ministry - ஐ சேர்ந்த
Pr. பிரசாத் & Pr. தனராஜ் ஆகியோர் குடும்பத்தின் **பணித்தள வருகை**



பாரேவா கிராம சபையில் கலாச்சார வரவேற்பு



பாடலா கிராம சபையில் ஜெப எண்ணெய்க்கான ஜெபம்



பாடலா கிராம சபையில் ஆராதனை வேளையில்



பாடலா கிராம சபையில் செய்தி வேளை

## BIBLE DISTRIBUTION SPECIAL AWARD



27.11.2010 ஞாயிறு அன்று *Bible Society of India,* குஜராத் கிளை மூலமாக நடைபெற்ற வருடாந்திர பங்காளர் கூடுகையில் கடந்த ஆண்டில் அதிகமாக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்த ஸ்தாபனத்திற்கு வழங்கப்படும் *Distribution Special Award* நமது ஷாலோம் ஊழிய ஸ்தானத்திற்கு வழங்கப்பட்டது. CNI Diocese Bishop Rt. Rev. Dr.V.M. Malavia, Bible Society of India குஜராத் கிளை Secaratry Dr. Rev. Nicolus ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த சிறப்புக் கூடுகையில் நமது ஷாலோம் ஊழியர்களை பாராட்டியது குறிப்பிடத்தக்கது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **திலிப் J. பார்கி** |
| தந்தையின் பெயர் | : | ஜாண் பார்கி |
| பிறந்த நாள் | : | 10.10.2000 |
| படிக்கும் வகுப்பு | : | 6th Std., |
| சொந்த ஊர் | : | மடுவேல் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | ராஜஸ்தான் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

விதிலிப் பார்கியின் தந்தை சகோ. ஜாண் பார்கி இயேசு கிறிஸ்துவை அறியாத ஒரு பீல் ஆதிவாசி. சாராயம் குடிப்பதும் தேவதைகளை வணங்குவதும் இவரது வழக்கமாயிருந்தது.

இவருடைய குடும்பம் சமாதானமின்றியும், நோயினால் பாதிக்கப்பட்டு, நிம்மதியின்றியும் காணப்பட்டனர். மிகவும் சோர்ந்து போன நிலைமையில் ஷாலோம் ஊழியர் சகோ. பதா கராசியா இவரை சந்தித்து இயேசுவைக் குறித்து கூறி ஜெபித்தார்.

தேவன் ஜெபத்தினைக் கேட்டு சகோ. ஜாண் பார்கியின் குடும்பத்திலுள்ள பிரச்சனைகள் அனைத்தையும் மாற்றிபோட்டார். குடும்பத்தில் சந்தோஷம், சமாதானம் பிறந்தது. அதன்பின் இவருடைய முழுக் குடும்பமும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது.

மடுவேல் கிராம சபையில் அங்கத்தினராக இருந்து தேவனை வழிபட்டு வருகின்றனர்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:–** படிப்பதிலும், நன்றாக ஜெபிப்பதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு. நன்றாக பாடுவான், நன்கு படித்து பெரிய டாக்டராக வாஞ்சை உள்ளது

**ஜெபியுங்கள்:–** இவன் நன்றாக படிக்க, தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும் ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :** Mr.Vimalon Jacob - Chennai.

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

சுதேச ஊழியர் சாட்சி

# Rev.. பாவ்ஜி கராசியா

## இராஜஸ்தான்



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என்னுடைய பெயர் பாவ்ஜிபாய் கராசியா. நான் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் குண்டா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இந்த பகுதியில் உள்ள மக்களில் அநேகர் சாராயம் குடிப்பது, திருடுவது, சண்டையிடுவது, போன்ற தீய பழக்கங்களில் அதிகமாக ஈடுபடுவர். வீட்டுக்கு வீடு சாராயம் காய்ச்சுவார்கள். ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் சாராயம் குடிப்பார்கள். இவர்கள் நோய்கள் வரும் போது நோய்கள் விலக மந்திரவாதிகளிடம் சென்று மந்திர வல்லமைகளை நம்புவார்கள். இயேசுவைப் பற்றி ஒரு முறை கூட கேள்விப்பட்டதே இல்லை. நானும் எல்லாவித தீய பழக்கங்களிலும் ஈடுபட்டிருந்தேன்.

எட்டு வருடங்களாக எனது சரீரத்தில் ஒரு வியாதி இருந்தது. அதில் மிகவும் கஷ்டப்பட்டு வேதனையடைந்தேன். இதனால் எனக்கும், என் மனைவிக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. இந்த நோய் குணமாக மந்திரவாதிகள், பூஜாரிகள், மருத்துவமனைகள் போன்ற பல இடங்களுக்கு சென்றேன். இந்த நோய் எனக்கு சுகமாகவில்லை. இந்த வியாதியிலிருந்ததினால் எனக்கு குழந்தை பாக்கியம் இல்லை. வாழ்வதை விட சாவதே மேல் என்று தற்கொலை பண்ண ஆயத்தம் பண்ணினேன். தற்செயலாக பாதர்பாய் என்ற ஷாலோம் சுதேச ஊழியர் என் வீட்டிற்குள் பிரவேசித்து இயேசுவைப் பற்றி கூறினார். பின் என்னிடம் உங்கள் வீட்டில் ஏதும் பிரச்சனைகள் உண்டா என்று கேட்டார். நான் இப்பொழுது தற்கொலை செய்ய முயற்சித்து கொண்டிருந்தேன் என்று சொன்னேன். அவர் உடனே இயேசு உனக்கு விடுதலை தருவார் என்று சொல்லி எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்.

அதன் பின் பக்கத்து கிராமத்தில் நடந்த ஜெபக் கூட்டத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். பாதர்பாய் என்ற அந்த ஊழியர் நீ உன்னுடைய பாவங்களை அறிக்கையிடு என்று கூறினார். நான் என் பாவத்தை இயேசுவிடம் அறிக்கையிட்டேன். இயேசு எனக்கு விடுதலை கொடுத்தார். என்னுடைய வியாதி குணமானது தற்கொலை எண்ணம் மாறியது. எனது குடும்பத்தில் சமாதானம் வந்தது. இப்பொழுது என்னை இயேசுவிடம் அர்ப்பணித்து ஊழியம் செய்கிறேன். எனக்காகவும், என் குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

மேலும் எங்கள் கிராமத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆராதனை நடந்து வருகிறது. தற்போது சுமார் 40 குடும்பத்தார் தேவனை இந்த ஆலயத்தில் ஆராதித்து வருகின்றனர். மேலும் 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகிறேன்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. Jebez Augustine Family,** Nazareth.

# SHALOM LIFE MEMBERSHIP ENROLLMENT

## ஷாலோம் ஊழிய
## ஆயுள் கால அங்கத்தினராக
## அழைப்பு




கடந்த 20 வருடங்களாக, நம் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக, ஒரு லட்சத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் தேவனண்டை நடத்தப்பட்டு சுமார் 500 பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும், 600க்கும் அதிகமான சபைகளை ஸ்தாபிக்கவும் தேவன் கிருபை தந்தபடியால் அவரை துதிப்போம். மேலும் சபை ஊழியம் மட்டுமின்றி, கல்வி, சுகாதாரம், மற்றும் மேம்பாட்டு திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறோம். மாதந்தோறும் இத்திட்டங்களை நிறைவேற்றகுறைந்த பட்சம் ரூ.10,000,00– (ரூ.பத்து லட்சங்கள்) Allowance மற்றும் Hostel Payment வகையில் செலவாகிறது. இது போக, மற்றஊழியத் திட்டங்கள், நிகழ்ச்சிகள், முகாம்களுக்கும் தனியாக செலவிடப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் வரும் பணத்தில் நாம் செலவு செய்கிறபடியால், சிலசமயங்களில் ஊழியர்களுக்கு **Allowance Payment** காலதாமதாக கொடுக்க வேண்டிய சூழ்நிலையாகிவிடுகிறது. மாதத்தின் முதல் வாரத்தில் அனைத்தையும் நாம் கொடுப்பதற்கு ரூ.10 லட்சங்கள் முன் வைப்புத் தொகையாகத் தேவைப்படுகிறது. இதற்காக ஜெபித்து ஆவியானவரின் நடத்துதன்படி, ஒரு நபர் ரூ.1000 ஒருமுறை செலுத்தி ஷாலோம் ஊழிய ஆயுள்கால அங்கத்தினர்களாக இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். முதற்கட்டமாக குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைந்துவிட்டால், இந்த நிதி நெருக்கடியை நிவிர்த்தி செய்து, முதல் வாரத்தில் இதர பிரச்சினையின்று ஊழியர்களுக்கு Payment கொடுத்து விடலாம். பின்பு ஒவ்வொரு மாதமும் வருகிறபணத்தை சேர்த்து அந்தந்த மாதம் எளிதாக கொடுக்கலாம்.

இந்த திட்டத்தில் உங்களையும், உங்கள் குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் நண்பர் உறவினர்களையும் அறிமுகப்படுத்தி இணைக்க மிக அன்புடன் கேட்கிறேன். ஷாலோம் ஆயுள் கால அங்கத்தினர்களுக்கு நாங்கள் அனுதினமும் ஜெபிப்பது மட்டுமின்றி குறிப்பாக பிறந்த நாள் மற்றும் திருமணநாட்களில் தவறாது ஜெபிப்போம். எங்கள் ஊழிய பாரத்தை சுமக்கும் பங்காளர்கள் பாரத்தையும் நாங்கள் எங்கள் ஜெபத்தில் வைத்துத் தாங்க ஆயத்தமாக உள்ளோம்.

இது குறித்து எங்கள் முன்னேற்றபணியாளர்கள், பிரதிநிதிகள் வரும்போது உற்சாகத்துடன் செயல்படுங்கள். ரூ.1000 பெற்றுக் கொண்ட பின்பு தலைமை அலுவலகத்திருந்து நன்றி கடிதம் மற்றும் ஊழிய காரியத்தை குறித்த C.D மற்றும் ***Shalom Life Membership Certificate*** அனுப்பி வைக்கப்படும். மாதந்தோறும் நம் பத்திரிகை மற்றும் வருடம் ஒருமுறை ஷாலோம் ஊழிய அறிக்கை அனுப்பி வைக்கப்படும். இன்றே இணைந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

# ஜெபக்குறிப்புகள்

- புதிய 2011ம் ஆண்டில் பீல் மக்கள் மத்தியில் தேவன் புதிய திட்டங்களையும், தரிசனங்களையும் கொடுத்து அவைகளை நிறைவேற்ற ஜெபியுங்கள்.
- முழு பீல் ஆதிவாசி மக்கள் நம் தலைமுறையில் இயேசுவை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் 3 மாநிலங்களிலும் திருச்சபை ஒருங்கிணைப்புப் பணி நடைபெற்று வருகிறது. தேவன் ஞானம் தந்து அனைவரும் இணைந்து ஒருமனமாகச் செயல்படவும் 3 மாநில ஒருங்கிணைப்பாளர்களை தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.
- Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் 750 பீல் ஆதிவாசி மாணவர்கள் மற்றும் Compassion மூலமாக தாங்கப்படும் 605 ஷாலோம் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். கல்விப் பணிக்கான அதிகமான தேவைகள் ரூ. 4 இலட்சம் கிடைக்கப்பெற, இவ்வருடத்தில் மாதம் ரூ. 400 கொடுத்துத் தாங்கும் ஆதிவாசி மாணவ ஆதரவாளர்கள் 200 பேர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.
- இவ்வருடம் 3 மாநிலங்களில் 85 கிராமங்களில் ஆலயம் கட்டப்பட தேவன் ஆதரவாளர்களை எழுப்ப, அனுமதி கிடைத்து தடையின்றி கட்டப்பட, குறிப்பாக அவசரமாகக் கட்டப்படவேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.
- பணித்தளத்திற்கு தேவையான Media உபகரணங்கள் வீடியோ கேமரா, Audio Recording equipments (Rs.1.5 Lakhs) உடனடியாக கிடைக்கப்பெறவும், Media Department –ல் பணியாற்ற நல்ல ஊழியர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.
- அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் கிடைக்கப்பெறும் ஒவ்வொருவரும் வாசிக்க, ஜெபிக்க, ஊழியங்களைத் தாங்க ஜெபியுங்கள். மேலும் அனுப்பப்படுகிற ஊழிய அறிக்கைகள், நன்றிக் கடிதங்கள், ஜெப விண்ணப்பப் பதில்கள் சரிவர கிடைக்கப் பெறவும் email, SMS, website மூலம் கொடுக்கப்படும் செய்திகள் சரிவர கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். கடிதப் பரிமாற்றங்கள் எந்தவிதத் தடையுமின்றி நடைபெற ஜெபியுங்கள்.
- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus (MBA II Year) Brighton Shalom (B.Tech Media Final Year) Joy Shekinah (Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- நம் ஊழியத்திற்கு மிக மிக அவசர தேவையான, ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய 1000 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழும்பப் பாரத்துடன் ஜெபியுங்கள்.

# பிரதிநிதிகளை தொடர்புகொள்ள....

பிரியமானவர்களே, நமது ஷாலோம் ஊழியத்தின் பிரதிநிதிகளை தொடர்பு கொள்ள வசதியாக அனைத்து பிரதிநிதிகளின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றை கீழே கொடுத்துள்ளோம்.

Other State :

| | |
|---|---|
| Mr. Daniel Jeyaraj | H.No. 16 - 165/8, Eshwaraiah Compound, Malkajgiri P.O. Hyderabad 500 047. Ph. 09849354493 040-27056377 |
| Mr. Arnold.M.Mosesraj, | #16, Munishwar Layout, I Cross, Bandepalaya, Hosa Palaya Extn, Bangalore, Karnataka 560068. Ph. 09886075639, 09886411639 |

Chennai :

| | |
|---|---|
| Mr. Ebenezer Daniel | B.O. Sharing Love Mission, New no:38 Old No:76A, 2nd Floor, 3rd St, Gill Nagar, Choolaimedu, Chennai, Tamil Nadu 600094. Ph.:(934) 447-5468 |
| Mr. Diaz Bose, D | B.O. Sharing Love Mission No.16F 1, M.R.J. Apartments, Andavar Nagar, 5th Street, Kodambakkam, Chennai, Tamil Nadu 600024, Ph. (904) 278-0315 |
| Mr. Jacob Bagyadass.J.M | No:1-A, Prasad Street, Seethapathy Nagar, Velachery, Chennai, Tamil Nadu 600042. Ph. 044-22435975, 044-22435974 |
| Mrs.Manoranjitham Wilfred, | 218, Majestic Colony, Valasaravakkam, Chennai, Tamil Nadu 600087. Ph. (988) 421-0600, 044-24866731 |
| Mr. Pauldurai.S | 21-B, Kamadhenu Nagar, 1st Main Road, New Perungalathur, Chennai, Tamil Nadu 600063. Ph. (944) 489-9908 |
| Mr. Samuel, M | 8, Thirumurugan Street, Ganesh Nagar, Velacherry, Chennai, Tamil Nadu 600042 |
| Mr. Immanuel Sekar, R, | Jothi Illam, 12/18, Spartan Avenue, Mugappair East, Chennai, Tamil Nadu 600037. Ph. (801) 513-6647 |

Coimbatore :

| | |
|---|---|
| Mrs. Phebe Anatharaz | W/o. Pr. Joel Anatharaz, Coimbatore, Apostolic Prayer House, No.8, Anna Nagar, Main Road, Peelamedu, Coimbatore Dist, Tamil Nadu 641004. Ph. (984) 307-4137, (0422) -256-2547 |
| Mr. John Victor.C. | 35, G.V Residency, Sowripalayam P.O, Coimbatore Dist, Tamil Nadu 641028. Ph. : (984) 331-3760, 0422-2577596 |
| Mr. Kingston.S.V, | H.22, Hudco Colony, 6th Block, Ganapathy, Coimbatore Dist, Tamil Nadu 641006. Ph. (944) 253-9044, 0422-2510564 |
| Pas. Philp Ness.V | BLESS INDIA Children's Home, Thaliyur (PO), Attikal, Thondamuthur, Coimbatore Dist, Tamil Nadu 641029 Ph. (994) 467-7872 |

Erode :

| | |
|---|---|
| Mr. Jebasingh Santhosam, | 8/9, Doddampalayam Post, Erode Dist., Tamil Nadu 638451. Ph. (944) 214-0655, 04295-240655 |

Hosur :

| | |
|---|---|
| Bro. George.S | Jesus With Us Church, 46/AA, Shanthi Nagar, 3rd Cross, Hosur Krishnagiri Dist., Tamil Nadu 635 109 Ph. 04344-223895, 04344-221616 |

Madurai :

| | |
|---|---|
| Mrs. Ruby Prabhavathi.M, | 12-B, Govindasamy Street, Sornam, Thirunagar, Madurai, Tamil Nadu 625006. Ph. : (944) 368-5920, 0452-2482581 |

Rajapalayam :

Mr. Immanuel Devaprakasam.S, Mahnaim Prayer Group, 91A, Periya Kadai Bazaar, Rajapalayam, V.N.R. Dist, Tamil Nadu 626117. Ph. 04563-223219

Sivagangai :

| | |
|---|---|
| Mr. Godwin Sandeep.S | No:13 Church, V Car Street, Opp to Majestic, T.T.Nagar, Karailadi, Sivagangai,Tamil Nadu623001. Ph.(989) 498-9591, 04565-238106 |

Nellai Dist. :

| | |
|---|---|
| Prof. C.S. Christopher | 48E/1A, Ambai Road, Bye - Pass Road, Xavier Colony, Tirunelveli - 627 005, Ph. 0462 - 2352052 |
| Mr. Manohar.S.P.M | Bethel, 6,Sriram Square, NGO Colony, Tirunelveli, Tamil Nadu 627007. Ph. (984) 331-2733, (0462)-3290655 |
| Mr. Jeyapaul.M | 3/8,Roja Street, Agastiayar Patti, Kalidaikurichi.P.O, Tirunelveli Dist, Tamil Nadu 627 416. Ph. 04634326518, 04634-223011 |
| Mr. Pitchai Jebaraj.G | 4/273, N.H. Colony, Perumalpuram, Tirunelveli, Tamil Nadu 627 007. Ph. (984) 216-8482, 04622532662 |

Tuticorin Dist. :

| | |
|---|---|
| Mr. Daniel Kirubakaran.J | 6 B/1B Briyant Nagar, 3rd Street Middle, Tuticorin, Tamil Nadu 628008. Ph. (984) 311-5663 |
| Mrs. Shanthi Livingston | 17 A, Sundaravelpuram, II Street, Tuticorin, Tamil Nadu 628002. Ph. (978) 764-8246, 0461-236-1059 |
| Mrs. Nirmala Felixson | No.11, N.G.O. Colony, 3rd Street, Ganesh Nagar, Tuticorin, Tamil Nadu 628008. Ph. 0461-2310766 |
| Mrs. Selva Seeli.G | 133/10 S.M.Puram, Vth street, Tuticorin, Tamil Nadu 628003. |
| Mr. Thomas.I, | 71A, Piramuthu vilai, 2nd Street, Tuticorin, Tamil Nadu 628002 |
| Mr. Jebakumar.A. | 1/12 Type I, Camp I, Thermal Nagar, Tuticorin, Tamil Nadu 628004. Ph. (948) 693-6040 |
| Mr. Godwin. V | Nila Seafoods Pvt Ltd, 137,Pudurpandiapuram, Tuticorin, Tamil Nadu 628002. |
| Mr. Balasingh.S | (Nila Cold Storage) 107J/152 B, Millerpuram, Tuticorin, Tamil Nadu 628008. Ph. 0461-231-1012 |
| Mr. Muthu.M | Amulya Sea Foods, C-97,Sipcot Industrial Complex, MadathurP.O, Tuticorin, Tamil Nadu 628008, Ph. (989) 468-5538, 0461-2340214 |
| Mr. Selvaraj.S | Type II, 2/1 Camp I, Thermal Nagar, Tuticorin, Tamil Nadu 628006. Ph. (936) 718-0270 |

Mrs. Pattu Rose Sargunam, 2/100 South Street, Korampallam, Tuticorin Dist, Tamil Nadu 628111

| | |
|---|---|
| Mr. Baskar.C | 23A Pillayar Koil Street, State Bank Colony, Tuticorin, Tamil Nadu 628001. Ph. (984) 212-2318, 0461-232-2318 |
| Pastor. Samuel Sounder | IPM Church, 4J/2-B, Briyant Nagar, 11th Street (Middle) Tuticorin, Tamil Nadu 628008. Ph. (979) 075-5464 |
| Mr. Gunasingh.D, | Subramaniapuram, Sawyerpuram (P.O),Tuticorin Dist, TamilNadu 628 251. |
| Mr. Raja Thambidurai. R, | Margoschis Prayar Group, 64F, Staply Street, Nazareth, Tuticorin Dist., Tamil Nadu 628 617. Ph. 04639-278213 |

K.K Dist. :

| | |
|---|---|
| Mr. Selvadurai.G | B.O. Sharing Love Mission,Kalikal House, Near A.G.Church,Gnaramvilai, Pacode.P.O, K.K Dist. 629168. Ph. (948) 768-9869, (934) 472-4395 |
| Dr. Sashiya Jayaharan | Doctor's TAFTEE Fellowship,No.18, MABBS Street, Nagarcoil K.K.Dist., Tamil Nadu 629001. Ph. 04652-222664, 04652-233437 |
| Prof. George.P | 16/113 A, Valiya Vilai, Melpuram, Pacode K.K.Dist., Tamil Nadu 629168. Ph. :04651-264343 (944) 399-3423 |
| Mrs. Vasantha Selvaraj | East Puthalam,Puthalam P.O,K.K.Dist., Tamil Nadu 629602 Ph. 04652-286444 |
| Mr. Kingbert.L | 27-5 A, Sinclair Street, Marthandam, K.K.Dist., Tamil Nadu 629165. Ph. 04651-271638 |
| Mr. Libin Thampi.P, | Paruthivilai, Mandaikadu.P.O, K.K Dist, Tamil Nadu 629252. Ph. (904) 754-5031 |
| Mr. Jerry David.P, | 30-54-6, Vendor Compound, North Street, Marthandam, K.K.Dist, Tamil Nadu 629165. Ph. (979) 178-1354 |
| Mr. Christoper.P, | Perumparuthi Kala Vilai, Pulieranghy, Thiruvattar P.O, K.K.Dist., Tamil Nadu 629177, Ph. (978) 795-8155 |
| Mr. Charles.P | Ponmanavilai, Karavillai, Marthandam, K,K,Dist, Tamil Nadu 629165 Ph. 04651-273112 |
| Mr. Jabarson.S.M | 3/7 B, "Jehovha Shalom" Bethel Street, Paravilai, Marthandam, K.K Dist., Tamil Nadu 629 168 |
| Mrs. Kislet.A | Monyvilla, Nedia Salai, Arumanai, K.K Dist, Tamil Nadu 629151 Ph. (046) 512-8680 |
| Dr. Geetha Gopi.Y | G.G.Cottage, Opp. CSI Hospital, Kulasekaram PO K.K Dist, Tamil Nadu 629161. Ph. 277265 |
| Mr. David Bright Singh.P | Sweetagham, Cheruvallivilai, Nalloor, Marthandam,K.K Dist, Tamil Nadu 629165. Ph. (944) 265-5321 |
| Mrs. Vasanthakumari.T.C | Melpuram, Mavarathalavilaiveedu, Pacode.P.O, K.K.Dist, Tamil Nadu 629168. Ph. 260805 |
| Mrs. Rosemary.M | Mottapilavilaiveedu, Maruthancode.P.O, K.K.Dist, Tamil Nadu 629 163. Ph. (948) 833-6467 |
| Mr. John Victor. A | (RTD Teacher), No.11/57 B, Opp to Canara Bank, Kuzhithurai, K.K.Dist., Tamil Nadu 629163, Ph. 04651-261116 |
| Mr. Shaji.F | R.C.Street, Arumanai.P.O, K.K.Dist, Tamil Nadu 629151, Ph. 04651-287433 |

## பிரதிநிதியாய் செயல்படுவோர் தேவை....

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே,

19 வருடங்களை ஊழியப்பாதையில் கடந்துவர தேவன் கிருபை தந்துள்ளார். பீல் மக்கள் திரளாக இரட்சிக்கப்பட, பீல் சுதேச ஊழியர்களைத் தந்து, ஆலயங்கள் கட்டப்பட கிருபை செய்துள்ளார். இம்மாபெரும் மிஷனெரிப்பணியில் நாங்கள் மோசேயை போல் முன்னாக நின்று ஊழியங்களை நடத்தி சென்றாலும், எங்களுடன் பணிபுரிய அநேக யோசுவாக்களாக பீல் சுதேச ஊழியர்களை, தேசத்தை சுதந்தரிக்க தேவன் எழுப்பியுள்ளார். அதுபோல் ஜெபித்து, தாங்குகிற நீங்கள் தான் மிக முக்கியமானவர்கள். ஆரோன், ஊரைப்போல் நீங்கள் தாங்குவதின் நிமித்தமாக யேகோவா நிசி தேவன் மூலமாக வெற்றியை சுதந்தரிக்கிறோம்.

மேலும் ஆரோன், ஊரைப்போல் தாங்குகிற நீங்கள் எங்களுக்கு மிக முக்கியமானவர்கள். இப்பணியில் வரும் நாட்களில் 1000 ஊழியர்களை, 1000 சபைகளை ஸ்தாபிக்க மேலும் உங்கள் உதவியை நாடுகிறோம். உங்களில் பலர் மிஷனெரி பணி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை கொண்டவர்கள் என விசுவாசிக்கிறேன். நீங்கள் மிஷனெரியாக செல்லமுடியவில்லை ஆனாலும் ஆத்தும பாரத்துடன் ஜெபித்து தாங்கி வருகிறீர்கள். அதற்காக தேவனை துதிக்கிறேன். நீங்கள் இன்னும் மிக நெருக்கமாக, அதிகமாக கற்று மிஷனெரி பணியில் ஈடுபட, பீல் மக்கள் திரளாய் இரட்சிக்கப்பட உங்களை ஈடுபடுத்திக் கொள்ள இன்னும் சில வாய்ப்புகளை தருகிறோம்.

ஷாலோம் மிஷனெரி பணிக்கென நீங்கள் பிரதிநிதியாக உங்கள் பகுதியில் செயல்பட உங்களை அன்புடன் அழைக்கிறேன். நம் மிஷனெரி பணியை ஜெபித்து தாங்குவோர் உங்கள் பகுதியில் சில தேவ பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்தித்து மாதந்தோறும் அவர்கள் தரும் காணிக்கையை ஜெபித்து வாங்கி, சேர்த்து அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே உள்ள ஷாலோம் ஆதரவாளர் சொற்பமாக இருந்தாலும், இல்லையெனில் யாருமே இல்லாவிட்டாலும் நம் பணிகளை உங்களை சுற்றியுள்ள தேவ ஜனங்களுக்கு பத்திரிகை, பிரதிகள், VCD மூலமாக அறிமுகம் செய்து பங்காளர்களாக இணைய வைத்து ஜெபித்து தாங்க முன் வரலாம். குறைந்தது ஐந்து பேர்களையோ பத்து பேர்களையோ அறிமுகம் செய்து காணிக்கைகளை மாதம் தோறும் சேர்த்து அனுப்பலாம். இதுவரை நம் ஊழியத்திற்கு 40 பிரதிநிதிகள் காணிக்கை சேர்த்து அனுப்பி வருகிறார்கள்.

பிரதிநிதிகளாக செயல்பட முன்வருவோர் எங்களை தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். அப்படி முன்வரும் பிரதிநிதிகளுக்கு விளக்கங்களைக் கூறி ஷாலோம் பத்திரிகைகள்

மற்றும் Phamlet, CD, VCD– இவைகளுடன் நீங்கள் காணிக்கை சேகரிக்க Receipt Book (3 Copies) அனுப்பிவைப்போம். அந்த பகுதியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஷாலோம் மாதப் பத்திரிகையில் உங்களை அறிமுகம் செய்து வைப்போம். நீங்கள் சேகரிக்கும் காணிக்கைகளை மாதந்தோறும் Cheque, DD மூலமாகவோ அல்லது வங்கியில் நேரடியாகவோ செலுத்தலாம். 2ம் ரசீது பிரதிகளை ஷாலோம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இது நீங்கள் பீல் மக்கள் இரட்சிப்பின் பணிக்காக செய்யும் மிகப்பெரிய உதவிமட்டுமல்ல மிஷனெரி பணியில் முக்கியப் பங்கு பெறுகின்றீர்கள். நீங்கள் சிறிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் மிஷனெரி ஆதரவாளர்கள், சிறப்பு நன்கொடையாளர்கள், ஆலயக்கட்டுமான பணி ஆதரவாளர்கள் ஆகியோரை தேவன் உங்களுக்கு கட்டாயம் தருவார். **“தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்.”** (மத். 10:41) என்ற அருள் நாதர் இயேசுகிறிஸ்துவின் வாக்கின்படி மிஷனெரி பணியை ஏற்றுப் பிரதிநிதியாக பணிபுரிய முன்வரும் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**“நம் தேசம் தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால் தேவபிள்ளைகள் அனைவரும் ஆளுக்கொரு கை ஆண்டவருக்காக வை”** என்ற சொல்–ன்படி செயல்படுவோம், முன்வாருங்கள் விபரங்களுக்கு ஷாலோம் தலைமை அலுவலகத்திலுள்ள ஊழியர்களையோ அல்லது சகோ. சாம் குணசீலன் அவர்களையோ தொடர்பு கொள்ளுங்கள். (செல் : 093456–75468)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

### *நமது ஷாலோம் கிளை அலுவலகங்கள்*

| | |
|---|---|
| மார்த்தாண்டம் | ***Bro. G. Selvadurai***<br>Kalikal House, Near A.G.Church<br>Gnaramvilai, Pacode.P.O<br>K.K Dist, Tamil Nadu 629168<br>Cell : 94876-89869 |

சென்னை

| | |
|---|---|
| ***Bro. B. Ebenezer Daniel***<br>New no:38 Old No:76A, 2nd Floor,<br>3rd St, Gill Nagar,<br>Choolaimedu, Chennai,<br>Tamil Nadu 600 094<br>Cell : 934 44-75468 | ***Bro. D. Diaz Bose***<br>No.16F 1, M.R.J. Apartments<br>Andavar Nagar, 5th Street<br>Kodambakkam, Chennai,<br>Tamil Nadu 600 024<br>Cell : 90427-80315 |

# நில்! கவனி!! புறப்படு!!

நம்முடைய வாழ் நாட்களிலே எத்தனையோ ஆண்டுகளைக் கடந்து வந்துவிட்டோம். நாம் சந்திக்க இருப்பது புத்தம் புதிய ஆண்டு. ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு நாளும் நம் வாழ்வில் என்ன நடக்கப்போகிறது என்பது கடுகளவும் நமக்கு தெரியாது. இதைத்தான் இஸ்ரவே—ன் அதிபதிகள் பாளயம் எங்கும் போய் ஜனங்களை நோக்கி "இதற்கு முன்னே நீங்கள் ஒரு போதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை" என்று கூறினார்கள்.

***நில்*** *(திரும்பிப்பார்)* **:**

நாம் கர்த்தருடைய ஜனங்கள். நம்மை நடத்துவது கர்த்தர்தான். உலகில் வேறுயாரையும் நம்பி புதிய ஆண்டை நாம் சந்திக்கப்போவதில்லை. ஒவ்வொரு ஆண்டின் டிசம்பர் 31ம் தேதி அந்த ஆண்டில் நடந்து வந்த பாதையை சற்று திரும்பிப் பார்ப்பது அவசியம். "பூர்வ நாட்களை நினை, தலைமுறை தலைமுறையாக சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்" (உபா. 32:7) என்று மோசே தன் பாட—ல் குறிப்பிட்டுள்ளார். கடந்து வந்த பாதையினை நினைத்துப் பார்த்தால், நாம் செய்யத சில தவறுகள் நமக்குத் தெரியவரும். அவைகளைப் புதிய ஆண்டில் திருத்திக் கெள்ளலாம். கடந்த ஆண்டில் சில வீழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கக்கூடும், சோதனைகளில் தோல்வி அடைந்திருக்கக்கூடும். அவைகளை எல்லாம் கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு மன்னிப்புப பெற்றுக் கொள்வது ஆவிக்குரிய மக்களாகிய நமக்கு மிகவும் அவசியம். கடந்த நாட்களில் கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளையும், வியாதியி—ருந்து, சோதனையி—ருந்து, பண கஷ்டங்களி—ருந்து நம்மை அற்புதமாக விடுவித்ததையும் எண்ணிப்பார்த்து நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

**கடந்து வந்த பாதைகளை நினைக்கும்போதெல்லாம்**
**கண்ணீரோடு நன்றி சொல்— துதிக்கின்றேன் ஐயா**
**உங்க அன்பு பெரியது, உங்க இரக்கம் பெரியது,**
**உங்க கிருபை பெரியது உங்க தயவும் பெரியது**

***கவனி*** *(சீர் செய்துகொள்)* **:**

புதிய ஆண்டில் கால் எடுத்துவைக்கும் முன்பு கர்த்தருடைய சமூகத்தில் சில தீர்மானங்கள் செய்வது நல்லது. கடந்த ஆண்டில் செய்த தீர்மானங்களின்படி நாம் நடக்க சில வேளைகளில் தவறி இருக்கலாம். இந்த புதிய ஆண்டில் அப்படியில்லாமல் தெளிவான தீர்க்கமான தீர்மானம் செய்வது அவசியம். நம்முடைய பார்வைகளில், வார்த்தைகளில், நடததைகளில், உறவுகளில், சிந்தைகளில் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளும் தீர்மானங்கள் மிகவும் நல்லது. யோர்தானைக்

கடந்து செல்வதற்கு முன்பு யோசுவா ஜனங்களை நோக்கி "உங்களை நீங்கள் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள், நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்". என்றான் ஒவ்வொரு நாளும் நாம் சுத்திகரிபடுவது மிகவும் அவசியம்.

***புறப்படு*** *(முன்னேறிச் செல்)* :

யோர்தானுக்கு நேராக நாம் செல்லும் நடைபயணத்தில் முன்னேறிச் செல்ல கவனிக்க வேண்டிய முக்கியமானவைகள் உண்டு. யோசுவாவின் கட்டளைபடி உடன்படிக்கை பெட்டி முன்னால் செல்ல வேண்டும். அதை கண்களால் பார்த்துக் கொண்டே நடக்க வேண்டும். நமது கானான் செல்லும் பயணத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டி முதன்மையானவைகளை உடன்படிக்கை பெட்டியிலுள்ளவைகள் நமக்கு நினைவூட்டுகின்றன.

***a) ஆரோனின் துளிர்ந்த கோல் :***

நாம் அழைக்கப்பட்ட அழைப்பை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. நம்மை தம்முடைய கனமாக ஊழியத்திற்கு அழைத்தவர் கர்த்தர் ஒருவரே. நமக்கு நியமிக்கப்பட்ட பணி எதுவாயிருந்தாலும் குறைவின்றி சிறப்பாக செய்ய வேண்டும். நாம் நியமிக்கப்பட்ட இடத்தில் வேறு எவரையும் எவ்விதத்திலும் பயன்படுத்த முடியாது. நமக்குக் கர்த்தர் தந்தது ஒரு அலுவலக பணியோ, நிர்வாக பொறுப்போ, தொழிலோ அல்லது ஊழியமோ எதுவாக இருந்தாலும் கர்த்தர்தான் நம்மை அதில் நியமித்துள்ளார் என்பதை தினமும் நினைவுகூர்ந்து, உண்மையும் உத்தமுமாய் கர்த்தருக்கென்று பணி செய்ய வேண்டும். மோசேயை கர்த்தர் அழைத்தபோது மோசே கர்த்தரைப் பார்த்து, வேறு யாரையாகிலும் அனுப்பும் என்று கூறினபோது, கர்த்தர் மோசேயின் மீது கோபமானார். நமக்குரிய வேலையை நாம்தான் செய்ய வேண்டும். வேறு ஒருவர் நமக்குப் பதிலாக நிச்சயமாக அதைச் செய்ய முடியாது.

***b) மன்னா :***

கர்த்தர் எந்த சூழ்நிலையிலும் நம்மை போஷிப்பவர். வனாந்திரத்தில் கிடைப்பதற்கரிய ருசியுள்ள மன்னாவை இஸ்ரவேலருக்குக் கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் நமக்குத் தருபவைகள் அனைத்தும் சிறந்தவைகளே. கானாவூர் க–யாண வீட்டில் இயேசு தந்த பிந்தின ரசம் அதிக ருசியுள்ளதாக இருந்ததல்லவா? கால தாமதமானாலும், முதன்மையானவைகளையே கர்த்தர் நமக்குத் தந்திடுவார். இதை எப்பொழுதும் நன்றியுணர்வுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

***c) கற்பனை பலகைகள் :***

நாம் நம் வாழ்க்கையின் வழிகாட்டி கர்த்தருடைய திரு வசனங்களே. நம் வாழ்வில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தித் தருவதும் கர்த்தருடைய வசனங்களே. 10 கற்பனைகள் மோசேயின்

மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்படுவதற்கு முன் அவனவன் தன் தன் விருப்பத்தின்படியே நடந்து இஸ்ரவேல் ஜனங்கள் ஒழுங்கற்ற நிலையில் இருந்தார்கள். அவருடைய வசனங்களையே நம் பயணத்தில் சிறந்த வழிகாட்டியாக கொள்ள வேண்டும். **"கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தமமார்க்கத்தார் பாக்கியவான்கள்."** சங். 119:1

ஆகவே கடந்த கால குறைகளை சில மணித்துளிகள் நின்று ஆராய்ந்து பார்த்து, நன்றாக் கவனித்து நம்மைச் சீர் செய்து கொண்டு புதிய தீர்மானங்கள் கர்த்தருடைய சமூகத்தில் செய்து, முன்னேறிச் செல்ல வேண்டும். கர்த்தர் நமக்குத் தந்திருக்கும் ஓட்டத்தை பொறுமையோடு ஒடக்கடவோம்.

2011–ம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமான ஆண்டாக விளங்கவும், புதிய கிருபைகள் புதிய தரிசனங்கள், புதிய ஆத்துமாக்கள் நிறைவாக நீங்கள் பெற்று மகிழவும், உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறோம்.

***தேவனுக்கே மகிமை உண்டாவதாக! ஆமென்.***

என்றும் இரட்சகரின் பணியில்

***Bro. J. அற்புதராஜ் மார்காஷிஸ்***

## பணித்தள சாட்சிகள்

**சகோ. பால்முனியா — குட்டாயா – ம.பி**

தன்னாபாய் என்ற சகோதரரை பாம்பு கடித்துவிட்டது. சில நிமிடத்திலே வாயி–ருந்து நுரை வந்தது. ஜெப எண்ணெய்பூசி ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**சகோ. அந்தர்சிங் பயாடியா — ஜாபாத் – ம.பி**

ரேசம்பேன் என்ற சகோதரியின் குடும்பத்தில் நிம்மதி இல்லாமல் இருந்தார்கள். ஜெபத்தில் விடுதலை கிடைத்தது.

**சகோ. பகதூர்சிங் பாரியா — ஜாராதாபர் – ம.பி**

ரம்சுபாய் என்ற சகோதரர் 15 வருடங்களாக மனநிலை சரியில்லாமல் இருந்தார். விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. வால்சிங் A. சொகாரியா — சுளியா – ம.பி**

ஜித்ரிபேன் என்ற சகோதரி கால்கள் நடக்கமுடியாமல் மிகவும் பெலவீனமாக இருந்தார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**சகோ. சங்கர்சிங் சங்காடா — கேன்ஜாடா – ம.பி.**

மாலாபாய் என்ற சகோதரரின் மனைவிக்கு பிரசவத்தில் குழந்தை இறந்து பிறந்தது. நானும்,

இக்குடும்பத்தாரும் இணைந்து விசுவாசித்து ஜெபித்தபோது நில நிமிடத்திலே தேவன் குழந்தைக்கு உயிர் தந்தார். தேவனுக்கு நன்றி.

**சகோ. பாதா H. கட்டாரா** **களியா – இராஜஸ்தான்**

ரமிளா என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. ஜெபித்தபோது தேவன் கட்டியை குணமாக்கி விடுதலை கொடுத்தார்.

**சகோ. பகதுர் T. அடா** **திம்பா மகூடி – இராஜஸ்தான்**

காளுபாபோர் என்ற சகோதரரின் சிறிய குழந்தை வியாதியினால் பாதிக்கப்பட்டார். மந்திரவாதிகளிடம் சென்றும் எந்த பலனுமில்லை. ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. வில்–யம் டாமோர்** **ஜீவக்கூட்டா – இராஜஸ்தான்**

தேவ்–பேன் என்ற சகோதரி அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டார். பைத்தியம் போல அவருடைய செயல்கள் மாறிவிட்டது. ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். இந்த குடும்பம் இயேசுவை விசுவாசித்தனர்.

**சகோ. வளியா S. மேடா** **கக்னியா – இராஜஸ்தான்**

பிரியங்கா என்ற சிறுமி கண்களில் கண்ணீர் வந்தது. சிவப்பு நிறமாக இருந்தது. ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**சகோ. கண்ணு பாபோர்** **மல்வாசி – குஜராத்**

ல–தாபேன் என்ற சகோதரி வயிற்று வ– மற்றும் வாந்தியினால் கஷ்டப்பட்டார். இரவு 12 மணிக்கு சென்று ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. ஹவ்சிங் சங்காடா** **பாரேவா – குஜராத்**

சுமித்ராபேன் என்ற சகோதரி அதிக வியாதிப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. காளு சங்காடா** **ரீடியா – குஜராத்**

புர்கிபேன் என்ற சகோதரி காய்ச்ச–னால் கஷ்டப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் சுகத்தை தந்தார்.

**சகோ. வீர்சிங் பாபோர்** **காப்ரி – குஜராத்**

ஒரு விசுவாச குடும்பத்தில் வீடு கட்டமுடியாமல் பாதியிலே இருந்தது. ஆலயத்திற்கு வந்து விசுவாசித்து ஜெபித்தபோது வீடு முழுமையாக கட்ட தேவன் கிருபை செய்தார்.

**சகோ. மத்தூர் மேடா** **தேவான்யாவட் – குஜராத்**

ஹீராபாய் என்ற சகோதரர் 2 மாதமாக வியாதிப்பட்டு சாப்பிடமுடியாமல் கஷ்டப்பட்டார். நாங்கள் விசுவாசித்து ஜெபித்தபோது நல்ல சாப்பிட தேவன் உதவிச் செய்தார்.

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருகே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# ஆர்தர் மர்காஷியஸ் ஐயர்

***மிஷனெரி முன்னோடிகள்***



**மர்காஷிஸ் ஐயரவர்கள்** இங்கிலாந்திலுள்ள லெமிங்டன் நகரில் 1852ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் பிறந்தார்.

இடையன்குடியில் மிஷனெரியாக இருந்த ராபர்ட் கால்டுவெல் பேராயர் அவர்கள், 1975ஆம் ஆண்டு விடுமுறைக்கு இங்கிலாந்து சென்றிருந்தபோது இந்தியாவின் தேவைகளைக் குறித்து அறைகூவல் விடுத்தார். அப்போது தேவனுடைய அழைப்பிற்குக் கிழ்ப்படிந்து, இந்தியாவில் ஊழியம் செய்ய, தன்னை ஒப்புக் கொடுத்தார். 22 வயது வா–பனாக ஆர்தர் மர்காஷியஸ் ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்த போது மருத்துவக்கல்லூரியில் படித்து முதுநிலை தேர்விற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

இந்தியாவிற்கு ஊழியம் செய்ய வந்த மர்காஷியஸ் 1875ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1876 ஆம் ஆண்டு நவம்பர் முடிய இடையன் குடியில், மிஷனெரி கால்டுவெல்லோடு தங்கி, ஊழிய பயிற்சியைப் பெற்று, தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார். 1880 இல் முழு குருப்ட்டம் பெற்றார். ஆரோக்கியமான உடல்நலை கொண்டவர் அல்ல. ஆஸ்துமா நோயினால் அவதியுற்று வந்தவர். ஆனால் தான் விரும்பி ஏற்றுக் கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஊக்கமும் ஆற்றலும் கொண்டவர்.

மார்காஷயஸ் ஐயர், நாசரேத்தில் பணியாற்ற வந்தபோது, பெருமழை, பஞ்சம் மற்றும் காலராவினால் மக்கள் மடிந்தனர். எனவே, அனாதைப் பிள்ளைகளுக்கென்று 1877ஆம் ஆண்டு, விடுதி ஒன்றை மார்காஷயஸ் ஆரம்பித்தார். அந்த இல்லம் “அனாதை சாலை” என்று அழைக்கப்பட்டது. இன்று Art and Industrial School என்ற சிறந்த I.T.I ஆகச் செயல்படுகிறது. இதில் பயின்ற மாணவர்கள் தங்கி, கல்வி மற்றம் கைத்தொழிலோடு இயேசுவின் அன்பையும் கற்றனர். 1878ஆம் ஆண்டு, நாசரேத் பெண்கள் போர்டிங் பள்ளியில் படித்த பெண்களுக்கு, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்தார். பெண்கள் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தினார்.

1892 ஆம் ஆண்டு மா்காஷயஸ் புதிய நிலம் வாங்கி புதிய கட்டிடம் கட்டி, பரிசுத்த லூக்கா திருநாளான அக்டோபர் மாதம் 18ஆம் தேதி பரிசுத்த லூக்கா மருத்துவமனையை பிரதிஷ்டை செய்து, அது வளர்ச்சியடைய அரும்பாடுபட்டார். பல ஊர்களி–ருந்து வரும் நோயாளிகள், மருத்துவமனையில் பணியாற்றிய டாக்டர்கள், நர்சுகள், ஆகியோரின் சேவையினால் கிறிஸ்துவின் அன்பைக் கண்டு கொண்டார்கள். அங்கு வரும் மக்கள் மிகவும் ஏழைகளானதால் ஒராண்டில் கட்டண விதியை ரத்து செய்துவிட்டார்.

1990ஆம் ஆண்டு உபதேசிமாருக்காக மா்காஷியஸ் ஒரு வேதாகமப் பள்ளியை ஆரம்பித்தார். 1930ஆம் ஆண்டு, அது இறையியல் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டு இக்கலூரிய மதுரை அரசரடிக்கு மாற்றப்பட்டது. மக்களுக்கு அநேக நன்மைகள் செய்ததால் (கைசர் – இ – ஹிந்த்) என்ற விருதை அரசு அளித்து பெருமைப்படுத்தியது. சென்னை பேராயர் வேத அறிவைப் பாராட்டி இவரை "கனோன்" ஆக்கினார். இவரது கல்விப்பணியைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழகம் தங்கள் குழுவில் ஒருவராக அவரைத் தெரிந்து கொண்டது. நாசரேத் தபால் அலுவலகத்திற்கு "தந்தி" வசதியைப் பெற்றுத் தந்தவர் மா்காஷியஸ் ஆவார். 1911 ஆம் ஆண்டு சாத்தான்குளம் – நாசரேத் ரோடும், 1923 ஆம் ஆண்டு போடப்பட்ட திருநெல்வே– – திருச்செந்தூர் ரயில்பாதையும் நாசரேத்திற்குக் கிடைத்தற்குக் காரணம் மா்காஷியஸ் ஐயரின் பெரும் முயற்சிதான்.

1876 ஆம் ஆண்டு ஊழியத்தை ஆரம்பித்த மா்காஷியஸ் ஐயா் 1878க்குள்ளாக 14 சபைகளை உருவாக்கினாா். தமது பணிக்காலத்திற்குள் சுமாா் 25க்கும் அதிகமான புதுச்சபைகளை உருவாக்கினாா்.

1889 ஆம் ஆண்டு மே மாதத்தில் மா்காஷியஸ் ஐயா் வியாதியினால் மரித்துவிடும் நிலைக்கு வந்தாா். உடனே ஜப்பானுக்குக் கடல் பயணம் மேற்கொண்டு குணமாகி மறுபடியும் நாசரேத் வந்தாா். 1905 ஆம் ஆண்டு மீண்டும் பெலவீனப்பட்டு ஆஸ்திரே–யாவுக்குக் கடல் பயணம் மேற்கொண்டு ஆறு மாதத்திற்குபின் மீண்டும் வந்தாா். 1908ஆம் ஆண்டு ஏப்ரல் 15ம் நாள் ஆஸ்துமா வியாதியும், வாதநோயும் அவரை வேதனைக்குள்ளாக்கியது. 27.04.1908 –ல் தேவனுடைய கரங்களில் தம்முடைய ஆவியை ஒப்புவித்தாா். அவருடைய சாீரம் சாயா்புரம் கோடன் ஐயரால் நாசரேத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது

இந்தியாவில் பல்வேறு மதம், மொழி, இனத்தைச் சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் சகிப்புத் தன்மையுடனும், ஒற்றுமையுடனும் வாழ்கின்றனர். இந்திய மக்கள் தங்களது விருப்பப்படி எந்த ஒரு மதத்தையும் பின்பற்றலாம். ஒவ்வொரு மதத்தினரும் பிற மதத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்றனர். இதனால் இந்தியாவில் பயங்கரவாதிகளின் சித்தாந்தங்கள் ஏடுபடுவதில்லை. இந்தியாவிடம் பாடம் கற்கவேண்டும் என்று அமெரிகக் விக்கிலீஸ் தகவல் தெரிவித்துள்ளது.

---

இந்திய நாட்டின் உணவுப் பண வீக்கம் டிசம்பர் 4ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 9.46 சதவீதமாக உயர்ந்தது. அரிசி, காய்கறிகள், பால், பழங்களின் விலை உயர்ந்ததே இதற்கு முக்கியக் காரணமாகும். முந்தைய வாரத்தில் பணவீக்கம் 8.60 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

கடந்த டிசம்பர் 13ம் தேதியன்று தென் கொரிய தலைநகர் சியோ–ல் கிறிஸ்துமஸ் –ஐ முன்னிட்டு தபால்காரர்கள் அனைரும் கிறிஸ்மஸ் தாத்தா வேடம் அணிந்து ஏழைகளுக்கு பரிசுப் பொருட்களை அளித்தனர்.

---

2 ஜி ஊழல் விவகாரத்தில் நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் முழுவதும் அனல் வீசியது. எந்த அலுவல்களும் நடைபெறாமல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு சில அதிரடியான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது.

நன்றி : http://www.dinamani.com


## எங்களுடன் தொடர்பு கொள்ள

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
|---|---|
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.`<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Rt. Rev. Dr. V. Devadass<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

**email : info@shalommission.in website : www.shalommission.in**



## கிராம ஆலயம்

# குவாலி

### குஜராத்

மத்தியபிரதேசம் மாநிலத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் மேக்நகர் தாலுகாவில் மிகவும் உள்ளடங்கிய கிராமம் குவாலி. இந்த மக்கள் குடிப்பதும், திருடுவதும் தொழிலாகக் கொண்டவர்கள். இறந்த ஆவிகளை வணங்குவதும், வியாதிப்பட்டால் பூஜாரிகளின் உதவியை நாடுவதும் இவர்களின் பழக்கத்திருந்தது. இயேசுவைப் பற்றி சிறிதும் அறியாதவர்கள். இவர்களில் ஒருவர் தான் சகோ. தினேஷ்புரியா.

இறந்த ஆவிகளை வணங்கி வந்ததால் சகோ. தினேஷ்புரியாவின் குடும்பம் செய்வினையினால் பாதிக்கப்பட்டு அதிக வியாதியினால் கஷ்டப்பட்டது. இதிலிருந்து விடுதலை பெற, அதிக பணம் செலவழித்தும் மந்திரம் செய்தும் எந்த விடுதலையும் இல்லையென்று சோர்ந்து போன நேரத்தில், அமயம்மாள் கிராமத்தில் சகோ. மத்தூர்புரியா மூலமாக நடந்த கூட்டத்தைக் குறித்து கேள்விப்பட்டு, சகோ. தினேஷ்பாய் குடும்பமாக கூட்டத்தில் கலந்துகொண்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது தேவன் பரிபூரணமாக விடுதலை கொடுத்தார்.

தேவனை ஆராதிக்க தன்னுடைய வீட்டை திறந்து கொடுத்தார். இந்த கூட்டத்தை சகோ. காலுகுந்தியா நடத்தி வந்தார். சகோ. தினேஷ்புரியா இக்கூட்டத்தை தற்போது நடத்தி வருகிறார். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே தன்னுடைய சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்கு கொடுக்க தற்போது அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தற்போது குவாலி, காளிகமா போன்ற கிராமங்களிருந்து 25–க்கும் அதிகமான குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஆராதனைக்கு தொடர்ந்து வருகிறார்கள்.

Sponsor Name : **Mr. Solomon & Mr. Jebaraj** - Pudukottai.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**


May every day of the
New Year glow with
good cheer & happiness
for You & Your family
HAPPY NEW YEAR - 2011
Rt. Rev. Dr. V. Devadass & Family,
Shalom Pastors & Bhil Evangelists
Field & Head Office Staff of Shalom